**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. 39/2020 DW1**

20.03.2025 **பி.வா.சா.1 பாலசுப்பிரமணியம் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வழக்கு சொத்துகளில் ஒரு சில அயிட்ட சொத்துக்களை வாதியின் தகப்பனரான 1ம் பிரதிவாதியிடம் இருந்து 2, 3 பிரதிவாதிகளாகிய நாங்கள் வாங்கினோம் என்றால் சரிதான். வழக்கு ஏ அயிட்ட சொத்துக்கள் ஒரு ராமசாமி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல, மாறாக 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். 1ம் பிரதிவாதிக்கு ஏ அயிட்ட சொத்துக்கள் எப்படி பாத்தியப்பட்டது என்றால் அவருக்கு பாகப்பிரிவினை மூலம் அவருக்கு வந்த தனி சொத்தாகும். மூதாதையர் சொத்துக்கள் தான் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை மூலம் வந்தடைந்தது. என்றால் சரியல்ல. அது வெங்கடேசனுக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்தாகும். வெங்கடேசன், அவரது சகோதரர்கள் மற்றும் அவரது அப்பாவுடன் சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். வெங்கடேசனிடம் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு அருகே எனக்கு தனிப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல இருக்கிறது. எந்த சர்வே எண்ணில் அவ்வாறு எனக்கு தனிப்பட்ட சொத்துக்கள் உள்ளது என கேட்டால் சர்வே எண்கள் நியாபகம் இல்லை. எனக்கு சுமார் 75 செண்டுக்கு மேல் நிலம் உள்ளது. 1ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவருக்கு சில தீயபழக்கவழக்கங்கள் இருந்தது என்றால் சரியல்ல. தற்போது 1ம் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆனது 1ம் பிரதிவாதியுடன் மோசடியாக ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2ல் யார் சாட்சி கையொப்பம் போட்டது என்று தற்போது நியாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.3 சான்றிட்ட நகல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3ல் யார் சாட்சி கையொப்பம் போடடுள்ளார்கள் என்று கேட்டால் தற்போது நியாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் வெவ்வேறு நபர்கள் ஆவார்கள். பி.வா.சா.ஆ.2ல் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. ஆனால் அவர்கள் எனக்கு பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். பி.வா.சா.ஆ.2ல் சாட்சி கையொப்பம் போட்டவர்களையே மீண்டும் அழைத்து பி.வா.சா.ஆ.3ல் சாட்சி கையொப்பம் போடச்சொல்லி கேட்காததற்கு காரணம் பி.வா.சா.ஆ.3 மோசடியான ஆவணம் என

தெரிந்து விடும் என்பதற்காகத்தான் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.